கர்த்தரின் வாக்குத்தத்தம் – 1

# கிரியைக்குப் பலன் உண்டு.

**உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்கிறார். எரேமி 31 : 6**

மேற்கண்ட வாக்குத்தத்தத்தை உனக்கென்று ஏற்றுக் கொள்ளும் என் அருமையான சகோதரனே, சகோதரியே,

மெய்யாகவே, **"உன் கிரியைக்குப் பலன் உண்டென்று"** கர்த்தர் சொல்கிறார். நான் எவ்வளவோ நன்மை செய்தும், அது எனக்கு தீமையாகவே முடிந்துவிட்டது என்று கவலைப்படுகிறீர்களா அல்லது நம்பினவர்கள் அனைவரும் கைவிட்டு விட்டார்களே என்று உள்ளம் உடைந்து போனீர்களா ? அல்லது பிரயாசப்பட்டதும் வீணாய் போய்விட்டதே என்று அங்கலாய்க்கிறீர்களா, கவலை வேண்டாம். **"உன் கிரியைக்குப் பலன் உண்டென்று"** கர்த்தர் சொல்கிறார். அல்லேலூயா! ஆமென்.

வேதம் சொல்கிறது, **"நமது அன்பின் பிரயாசங்களை மறந்து போவதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே"** என்பதாக. உலகம், உற்றார், பெற்றோர், நண்பர், உறவினர், உடன் பிறந்தார் அனைவரும் நீங்கள் செய்த உதவியை மறந்து போகலாம். அதுமாத்திரமல்ல; **"நீ எங்களுக்கு என்ன செய்தாய் ? ஒன்றுமே செய்யவில்லை"** என்று குறை கூறலாம். உன்னிடத்தில் நன்மை பெற்ற நபரே, உன்னைத் தூற்றிக்கொண்டு, அவமானப்படுத்திக்கொண்டு அலையலாம். சோர்ந்து போகவேண்டாம். இதற்காக உள்ளம் உடைய வேண்டாம்.

இயேசு சொன்னார்; "உலகம் உங்களைப் பகைத்தால், உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள் . . . நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும் உங்களைப் பகைக்கிறது." **யோவான். 15:18,19**

நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும். நீங்கள் துக்கப்படுவீர்கள். ஆனாலும் **உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். யோவா.16 : 20.** என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். மத்தேயு 5 : 11,12.

**"உன் கிரியைக்குப் பலன் உண்டென்று"** கர்த்தர் சொல்கிறார்.